[illegible]

...ஷமயிலுண்டு என்று எண்ணிய எண்ணமும் ஒழிய வழி நேர்ந்ததே! என் செய்வோம்! யாது பற்றியெனின், மூதறிஞர் முதுமொழிகளை முற்றிலும் கசடறக் கற்ற பண்டிதமணிகள் நமக்கேதுமுபகரிப்பதில்லையே. நம்மவர்க்கு எக்காலமும் குன்றாவலியும் அழியாப்பொருளும் கல்வியே. அதைக்கொண்டே நமதுமுன்னோர் இத்தேசத்திலிருந்து தர்மதங்களையும் தராசாரங்களையும் சிறிதும் மிகுதியன்றி ஒட்டினார்கள். ஏதேனும் புதிய ஒருஆசாரம் வேண்டுமென்று முயன்றாரில்லை. என்னையெனில், ஆரியர் அனுதியிற் கொண்ட எந்தவாசாரமும் அனுதியிற்கொண்ட எந்த வாசாரமும் மதத்துட் சம்பந்தம் பெற்றதும் பிரத்தியக்ஷத்திற் சோதிப்பவனுக்கு ஒரு பயனைத்தருவதுமே அமைந்திருக்கிறது. அவ்விஷயம் இனிக்கிரமமாய் எழுதப்படும் ஆரியாசார ரகசியத்திற் காணலாம்.

Chilambaram. Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No. 76. Sau-kalooneer Pilliar koil Street.

ஓம்.

ப்ரம்மவித்யா.

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை
பிரசுரஞ்செய்யப்படும்.

புத்தகம்-5. சிதம்பரம்: 1890 ஞு டிசம்பர் மீ 15வ | இல-5.

[illegible]

பண்டிதர்களுக்கறிவுறுத்தல்.

(96-ம் பக்கத்தொடர்பு)

ஆகலின் நமது மதம் வருணம் ஆசாரம் இவற்றின் சம்பந்தத்தையறிந்த பண்டிதர்களே வெளிவாராராயின் நமக்கதிலும் வேறான குறைவுண்டோ? அறிஞர்காள்! சிறிது செவிகொடுங்கள்! முன் மாந்தாதாமுதல் நந்தனீறாகவுள்ள வரசர் இப்பூமண்டலத்தையாண்டுவந்தகாலத்தில் அந்தணர்க்குள் அறிஞர்க்கு அதிக கௌரவமும் மற்று அவரிடம் அன்பும் பெருகிவந்தது. அவர் சொல்வது தருமமாய் நடந்தது. அவர்க்குக் கல்வி யொழுக்கங்களும் நன்மையடைந்திருந்தன. இக்காலத்தோ

நாநாதிஷ்டி யஜ்ஞம் நஸவ்ய
யாஹஜத்ர்யாஷ்டிக்யம் நாஷ்டிவா
நஸ்ஸம்வாஹர்ஷே தஷ நெநவ
ஸஜ்யாஸவிஜாநம் ச்விவஹம் ஹா
வ: ஸூக்ஷ்மேளதாவீ ந்யஸ்தம்
வ்யவஸ்திதி விஷாம்ய சணவ
ஜயதீவஸாவக ஸஸ்யதேநா
நீம் ஸந்தேகௌவாயந்ர
ணாம் ஸஞ்யஹஸ்ஸ: ஸீலம்
ஜஹஸீநாநீம் தத்ததத்வம்
வெஸம்வெ சஸ்தேஸீயவ
ஞ்ஞிதஞ்ஞஸ்ய ஸவிவிதயா வா
ண்யாஹேளண்யா விவாரயம்தி
க்ஷிவிஷ்டிவிம் நவ்யம்கவ்யூரவாரா
கிஸ்திதி, ஸதேஷ நாஷ்டிக
ஸ்விதேஸ்யாநா ஸஷ்ஷம் ஜாநீ
யாக வெதம் யஸ்வாயம்ஷ்டிஷவ
ரம்வாரா தஸ்ஸதீம்ஸாஸ்ஸவித்ரம்
க்ஷிவிஷ்டிவிஷ ஷாஷண ஸ்வரம்
ஸரயஷ்ஹேளண ஸம்வ்யநா
யம் ஸநாஸஸிதஸநயம் விவ
ரீதாயஸ்வஸூஹம் உவெஸ்க்ஷி
தவ்யஸாணாதிஸ்வ ஸநாஹர
ஹோவவநஜா தஸ்ஜ்ஜுலேஷ
கயம்விஸ் ஷ்நஸிஸ்ஸரிதாராம்ம
ஸ்வேளஸஸ்திஷ்த்ர வ்ய: ஷ்ஸாவ
யிதம். தநேதஷாம்ஸ்ய

வேதங்களையாதல் சாஸ்திரங்களை
யாதல் எவனும் முற்றிலும் கற்ப
தில்லை. நல்வழி மாருது நடப்ப
தில்லை. நாத்திகம் புகாதிருப்பதி
ல்லை. ஜீவகாருண்ணியம் பெறு
வதில்லை. உலக நிலையறிவதில்லை.
இதற்கெல்லாம் காரணம் நந்தேய
த்துப் பண்டிதர் உதாசீனமே.
ஐயா! இக்காலத்தில் இத்தேசத்
துப் பிள்ளைகளாலே இப்புண்ணி
யபூமிக்கு நேர்ந்த பெரும் விபத்
தைப் பாருங்கள்! இக்காலத்தி
லே ஆங்காங்கு கூடி ஏதேதோ
சில வாசாரங்களை நமது தேசத்
திற் செய்விக்கவேண்டும் என்றுத்
தேசித்து நம் பண்டிதர் அறியாத
ஆங்கிலேயபாஷையில் ஏதேதோ
பேசி முடிக்கின்றார்கள். இவர்க
ளுள் பரம்பரையில் வேதங்களை
யும் சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்
தவர் மிகக்குறையும். ஏதோ அனே
யாங்கில வுச்சரிப்புப்படர்ந்து தன
னிலே பொழிந்து பிரகரணமழிந்து
ள்ள சில வசனங்களை பொறுந்து
காமனத்திற்பட்ட வாங்கிலேயா
சாரத்தை நந்தேயத்தில் நாட்ட
முயல்கின்றார்கள். இவர்களுக்கு
ஆங்கிலேயர் சொற்களே ஆகமங்
கள். அத்தேச சரித்திரங்களே
அறநூல்கள். சமாசாரப் பத்திரி
கைகளே சற்புராணங்கள். இந்

த்ய: ஸாஸ்த்ரவாக்யம் ச
ரஸ்ய தத்: ஸ்ருதிஸ்ம்ருதி
தம் ஸநாதநாநி ஸஞாநி
ஹவிணவாணீவத்ராணி இதி
க்ஷிஷ்ஷேத: ப்ராமணஸ்ய
த்யாயநாஸா தத: க்ஷி
வரம் ப்ராமாண்யஜ: ஸாஸ்
த்யா நாஸாவாரம் ஸூதேஸ்யம்
ஹேஸ்தாநெவ ஸிஷ்டாசாரா
ணாம் ஸவதேதாவி தநே
ஷ்டாவநாய வ்யவதநெ ஹ
ஹ வா ஸ்வா த்ய வா ர ா
ணாம் ஸத்வெசஸ்காவெநஸ்யா
ஸவ்யவாரஸ்தநாநீ ஸ்ஸாகவி
விதேரவாவ்யாந ந்யாயெந
ஸ்யா நஜஸ்மஸ்ஸா தநீயெஷா
ஸாரேஷ ஸஸாகஞ நாரீ
ஷஸவரேணஸம்ஸரஸஹஸிய
ஸ்ஸம்தீஷ தயாவரஸ்யஹ்ய
ஹேவதஸோநாஸ தயா ஸர
வாணிக்ரஹணம் ஸவஸாணா
ஸ ஸந: ஸரேண ஸஹஸி
யதாநேகாரம்மம் ந்யத்வம்தீ
ஷ, தயாஸஷ்டவஸரஸம்மஸ
ஸஹ்யஸமஹ்ஸம்தீஷ ஸயிந்யா
ப்ரஸஹஞயா நிரஸவயம்தீஷ
ஸஸவஸ்யஹதஸ: கௌஸ
ஸ்ரதேளவரதேஸவிஸம்தீ

நூல்களைக் கற்று அப்புறம் நமது
சிஷ்டாசாரத்துக்குப் பதிலாய் மே
ற்றிசையார் ஆசாரத்தைக் கொ
ண்டு ஒரு முடிபுசெய்ய முயல்கி
ன்றனர். அந்தோ! ஒருசமயம் மே
ற்றிசையார் ஆசாரங்கள் நமது தே
சத்தில் நிலைபெறுமாயின் அப்பொ
ழுது அது அருவருக்கத்தக்கதா
காதாயினும் இக்காலத்தில் அது
எவ்வளவும் நமக்கு ஒவ்வாது.
பாருங்கள்! நமது பெண்டிர்கள்
வேறு புருஷருடன் தனியறையில்
இரகசியம் பேசவும், பரபுருஷன்
வீட்டிற்றனே வெகுகாலம் இரு
க்கவும், பலவவயவந்தெரிய ஒரு
டையுடுத்தி வேறு புருஷன் கை
பிடித்தாடவும், நீதிசாலைகளில்மற்
றப் புருஷனுடன் தனது சம்பந்த
த்தைத்தன் பெண்சாதி ஒப்பவும்,
முன் புருஷன் கேளிவிலாச சக்
தியைப் பின் புருஷருடன் சொல்
லிக் களிக்கவும், பற்றவர் குடித்
த மிகுதியைக் குடிக்கவும், வை
த்தியர் பரீக்ஷிக்கவேண்டித் தனது
சரீரத்தை மற்றவர்க்குக் கொடுக்
கவும, சிறு பிள்ளைகளுக்குப் பெ
ண்களே கருப்ப சிகிச்சை கற்பி
க்கவும், தேசம் விட்டுத் தேசம்
தனித்துச் சஞ்சரிக்கவும் நேர்ந்தா
ல் எந்தப் புருஷனும் அதை அரு

[illegible]

வருக்கா திருப்பாளு? இவ்விஷயங்களெல்லாம் மேற்றிசையிற் சாதாரணமாய் இருக்கின்றது. பாருங்கள்! மேற்றிசையில் விவாக சம்பந்த விலக்கு வழக்கு அடிக்கடி கணக்குக் கடங்காது நேருகின்றன. முன் புருஷனை விட்டு அவனிருக்க மற்றவனையும் மணப்பார்கள். பல பிள்ளைகள் பெற்றும் பல புருஷருடனிருந்து வயதுசென்ற மாதை மற்றச் சிறுவனை மணம்புரிவாள். சிலர் கன்னிகைளாகவே காலங்கழிக்கின்றார்கள். இங்ஙனமாயின ஒருத்திக்குப் பல புருஷர் ஏன்? பல பெண்களுக்குப் புருஷரோ இல்லையென்னும் பெண்களுக்குப் பெருங்கஷ்டம் அத்தேசத்திலுள்ளது. ஒரு புருஷன் கிடைக்காமற் பெருமாட்டிகளனேகர் மடந்தையராயும் மரிக்கின்றனர். இத்தேசத்திலும் பெண்கள் பருவமடைவதற்கு முன் எவ்விதத்திலும் பெரியோர் ஒரு புருஷனிடம் பெண்ணைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஒரு புருஷனுக்குப் புறம் மறு புருஷன் கூடாது என்னும் நிர்ப்பந்தமும் இருக்குமேல் அவ்விடத்தில் முற்கூறிய வியத்திரவம் வரப்பெறாது. பாருங்கள்! ஓரோ தேசத்தில் ஒருத்தி மிருகம்

[illegible]

காலவரை கடந்து கணக்கிலடங்காத புருஷரை மணந்திருக்கும்பொழுதே ஒருவனையாதல் தன் கணவனெனப்பெருக்காரெனுஞ்சொல்ல வாற்றலற்றுப் பல பெண்களை நிறுத்திவைத்தவென்றால் இஃதெவ்வளவு கொடுமை. ஆதலாற்றான் நூற்றிற்கு இருபத்தெட்டே புருஷருடன் கூடி வாழ்பவர். இத்தேசத்தோ நூற்றிற்கு நாற்பத்திநான்காகின்றது. மற்றவரோ புருஷனை இழந்த கைம்பெண்களேயன்றிப் புருஷன் பெயரறியாதவரல்ல. மற்றும் ஒருவன் ஒருத்தியையே விவாகஞ்செய்ய வேண்டுமென்னும் நிர்ப்பந்தம் அவர்க்குண்டு. இவ்வழியை இத்தேசத்தில் காட்டவே சங்குழந்தைகள் வெகு சிரமப்படுகிறார்கள். இனி இதன்பயன் மேற்றிசையார்க்குச் சந்தோஷமேயன்றி வேறில்லை. இனியும் அறிஞர் மையல் கொள்வரேல் காது மதாசாரங்கள் ஒழிந்தேபோம். ஆதலின், வெளிவேறுங்கள்! உண்மையை வெளியிடுங்கள்! காலமோ குறைவு. மற்றவர் முயல்கின்றார். ராஜாங்கத்தாரும் பிரேமைசிதத்தால் வருந்தேடவந்தும். பின் உங்கள் முயற்சி பயன்படாது. ஆதலின் சபைகளைக் கூட்டுங்கள்! அங்

[illegible]

குண்மையை காட்டுங்கள்! அவற்றை நமது தவப்பயனுப "பாரத தர்ம மகாமண்டலத்துடன்" சேருங்கள்! "இந்துலகுலைக சங்கத்தை"யடையுங்கள்! புதிய சீர்திருத்தத்தை ஒழியுங்கள்! கிழ்மக்களை யாதரியுங்கள்! நம் தேசத்துக்குள்ள ஆபத்தைக் கவனியுங்கள்! உலகநீதியைப் பத்திரிகைகளாலறி[illegible]ங்கள்! வீண்காலங் கழிக்கவேண்டாம்! உங்கள் முயற்சிகைகூடவேண்டி உண்மைப்பொருளை வழிபடுங்கள்! இக்காலமோ உங்கள் பெண்டீர் பிள்ளைகள் சிடர் இவர்களை உங்களுக்குச் சுதந்திரமாகா தடிக்கின்றது. அவர்களின்றி உங்கள் இல்லறம் நடப்பதெப்படி! ஆதலின் கையிலிறகுட்நாவில் நன்மொழிகளும் உங்களுக்குப் பெருகுகவென்று உலகெலாங்கடந்த வுண்மைப்பொருளாய உமாபதியைத் துதிப்போமாக.

1890 ஞு நவம்பர்மீ 14, 15, 16, 17, 18 இந்தத் தேதிகளில் டில்லிமாநகரிற்கூடிய பாரத தர்ம மகாமண்டலத்தின் வரலாற்றுச்சுருக்கம்.

ஜயா!

சென்ற நவம்பர்மீ 14உ பிற்பகல் நாலுமணிக்கு "பாரத தர்ம மகாமண்

[illegible]

௧௮௯௦- நவம்பர மாஸே

[illegible]

டலத்தின்" முதற்கூட்டம் கூடியது. அதற்காகவே யமுனை தீர்த்தத்தில் ஒரு பெரிய கூடாரம் போடப்பட்டிருந்தது. அங்குக் கூடிய கூட்டம் வெகு பெரியது. அதற்கு வெகு தூரங்களிலிருந்து அனேக இராஜாக்களும் ஜமீந்தார்களும் மற்றுமுள்ள பிரபுக்களும் பண்டிதர்களும் வந்திருந்தார்கள். இவ்விஷயத்தில் டில்லிமாநகரத்துப் பிரஜைகள் செய்த ஓர் பெருமுயற்சி மிக வியக்கத்தக்கதாயிற்று. அனேக ஜனங்கள் நடுப்பகல் முதல் கூடிவந்தார்கள். 3 வது 4 வது தினங்களிற்கூடிய கூட்டம் சுமார் 8000 - ம் ஜனங்களுக்குமேலிருக்கலாம்.

காரியம் $3\frac{1}{2}$ - மணிக்குத் தொடங்கப்பட்டது. அனேக பண்டிதர்கள் எழுந்து அனேகவேதவாக்கியங்களால் மகாமண்டலத்தை ஆசீர்வதித்து உடனே ஸ்ரீகணபதி முதலிய ஹிந்து தேவதைகளுக்குப் பூஜையும் நடத்தினார்கள். மற்றுச் சபையின் பூர்வாங்கமெல்லாம் ஹிந்து வேதவிசுவாசத்திற்கிணங்க நடந்தது. உடனே ஜவந்தர் நகரவாசியாய ஸ்ரீகிருஷ்ண சாஸ்திரியார் அவர்கள் எழுந்து "இப்பாரத தர்ம மகாமண்டலத்தி

[illegible]

ற்கு ஸ்ரீகாசிக்ஷேத்திரத்திலிருந்து வந்திருக்கும் ஸ்ரீசிவகுமார சாஸ்திரிகள் அவர்கள் ஆசாரியராயும், ஸ்ரீராஜபுத்திரஸ்தானத்துள்ளபல வரசர்க்கும் பர்ஹாம்பூர் மகாராஜா அவர்களுக்கும் குருவான ஸ்ரீமான் தேவகீநந்தனாசாரிய கோஸ்வாமி அவர்கள் அக்கிராசனாகவும் இருக்கக்கேட்டுக்கொண்டார். அவ்விஷயம் எல்லோரும் ஒருமனதாய் இருக்கக் கேட்டுக்கொண்டார்கள். அவ்விஷயம் எல்லோரும் ஒருமனதாய் ஒப்பியவுடனே ஸ்ரீசிவகுமார சாஸ்திரிகள் அவர்கள் ஆசாரியஸ்தானத்தை வகித்து இச்சபைக்குப் பங்களூர் ராஜசபிக்ஷகரவாசியான ராஜாசபிக்ஷக ம. சுப்பராய் அவர்கள் அக்கிராசனாதிபதியாய் இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இப்பிரேரணை ஆல்வார் நகரத்தவரான ஸ்ரீமகாமகோபாத்தியாய பண்டித ராமகபால் அவர்களாலும் மற்றும் பண்டிதர்களாலும் ஆமோதிக்கப்பட்டு எல்லோரும் ஒப்புப்படி முடிந்தது. பிறகு தாம்மகாமண்டலத்தின் பொதுக் காரியதரிசியாய ஸ்ரீமத் பண்டிததீனதயால் அவர்கள் அக்கிராசனாதிபதிக்கிட்ட ஓர் புஷ்பமாலையை யவர் வகித்து அக்

[illegible]

கிராசனத்தைச்சிறப்பித்தார். உடன் அக்கிராசனாதிபதி ராஜா அவர்கள் எழுந்து ஹிந்திபாஷையில் "இவ்வித ஹிந்துமத மகாசங்கம் கூட நேர்ந்த காரணத்தைப்பற்றி வெகு திறமையுடன் பிரசங்கித்துமுடித்தார். மணி ஆறு ஆகவே சபை கலைக்கப்பட்டது.

2-வது தினம்.

முதல் நாள் முறை வழுவாது மண்டலாசிர்வாதம் விக்கினேசுர பூஜைமுதலியன நடந்தன. அன்று ஓர் சிங்காஸனம் வைத்து அதற்குத் தங்கக்குடை வெண்சாமரம் முதலிய ராஜக்குறிகள் சேர்த்து அதில் வேதங்கள், ஆகமங்கள், தர்மசாஸ்திரங்கள், புராணங்கள், மாபாரதம் இவை வைக்கப்பட்டன. அச்சிங்காசனத்தின் இருபுறத்தும் இரண்டு ஆசனங்கள் போடப்பட்டன. ஒன்றில் மகாராஜா கோஸ்வாமி தேவகீநந்தனாசாரியார் என்னும் தென்னிந்தியா பக்திமகக் குருவும் மற்றொன்றில் ஸ்ரீகாசி சிவகுமாரசாஸ்திரிகளும் உட்கார்ந்தார்கள். அவ்வெள்ளிச் சிங்காதனத்தின் முன்புறத்தில் மேடை போடப்பட்டிருந்தது. அதற்குச் சமீபத்தில் அக்கிராசனாதிபதி காரியதரிசி நிர்வாகசபையார் இவர்கள்

[illegible]

இருந்தார்கள். அப்பந்தலிற் பிராமணுதி வருணங்களுக்குள்ளபடி வெவ்வேறு இடங்கள் ஏற்படுத்தப்பட்டன. உடனே அடியிற்கண்ட தீர்மானங்கள் எல்லோருங்கூடி ஏற்பட்டன.

1 - வது தீர்மானம்.

இக்காலத்தில் நம்மவருட் சிலர் தமக்குள்ளசம்ஸ்காரங்களைவிட்டிருப்பதாய்த் தெரிவதால் ஒவ்வொரு தர்மசபைகளும் பஞ்சாயித்துகளும் இவ்விஷயத்திற் கவனஞ்செலுத்தி அவர்களுக்கும் எவர்களுக்கும் தர்மசாஸ்திரத்திற்கண்டபடி சம்ஸ்காரங்களைத் தவறாது நடத்திவர முயலவேண்டும். (இவ்விஷயத்தை அமிர்ஸ்டார் நகரத்துப்பண்டிதர் வனமாலிதத்தர் பிரேரிக்க ஜலந்தரபுரவாசி கிருஷ்ணசாஸ்திரியார் ஆமோதிக்க எல்லோரும் ஒப்பினார்கள்.)

2 - வது தீர்மானம்.

இந்துக்களல்லாத சிலரால் இந்துக்களின் விவாகாதி விஷயங்களிற் செய்ய உத்தேசிக்கும் சீர்திருத்தங்களைப்பற்றி இம்மண்டலம் மிக ரோஷப்பார்வையுள்ளதாயிருக்கிறது. சம்போகவயோநிர்ணய முதலிய மதாசார விஷயமான காரியங்களில் நமது காருண்ணிய

[illegible]

வரசாங்கத்தார் எவ்விதத்திலும் பிரவேசிக்கக்கூடாதென்று இம்மண்டலம் உறுதியாய்ச்சொல்லுகிறது. (இவ்விஷயம் மதுராநகரத்துப் பண்டித நந்திகிசோரதேவர் அவர்களாற் பிரேரிக்கப்பட்டு அஜ்மீர் பண்டித குருசங்கரரவர்களாலும், காசி பரிவ்ராஜ குமாரஸ்ரீ கிருஷ்ண பிரசன்ன பண்டிதரவர்களாலும், அலிகர் நகரத்துப் பான்யிரிலால் முனிஷி அவர்களாலும் அனுமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

3 - வது தீர்மானம்.

இனி விவாகங்களில் மிதமிஞ்சி இருதிறத்தாரும் பணம் வாங்கும் துர்வழக்கமும் தருமசாஸ்திரங்களிற் சொன்னபடி நடக்கவேண்டியது தவிர அதற்கதிகமான வீண் சிலவுகளும் இனிநிறுத்தப்படவேண்டும்(இ-ம-அஜ்மீர் பீதாம்பர பண்டிதர் பிரேரிக்க பரதபுரீ பண்டித ராமசந்திரரால் அனுமோதிக்கப்பட்டது.)

3 - வது தினம்.

4-வது தீர்மானம்.

இம்மகாமண்டலத்தின் கருத்து ஹிந்துக்களின் மதாசாரங்களை இரக்ஷிக்கவேண்டியதும் அவர்களுக்கு மதசுதந்திரத்தைக்காக்கவே

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ண்டியதுமேயாதலின் இப்பரத கண்டத்துள்ள எந்தத் தர்மசபையும் இத்துடன்சேர விரும்பப்படுகிறது. (இ-ம் லாகோர் பண்டித கோபீனாதர் உரைக்க காபுர்தலா வாசி பண்டித ரகுவாதயால் வேதாந்த பூஷணர் ஒப்ப மற்றவராலும் ஒப்பப்பட்டது.)

5-வது தீர்மானம்.

தேவநாகரலிபியும் ஸம்ஸ்கிருத பாஷையும் பரவவேண்டிய முயற்சிசெய்யவேண்டும்.

(இ-ம் பம்பாய் குட்லோல் பண்டிதர் சொல்ல குமாரஸ்ரீ கிருஷ்ணப்ரஸன்னராலும் பண்டிததீனதயால் அவர்களாலும் ஒப்பப்பட்டு மற்றெல்லோரும் ஒப்பமுடிந்தது.)

இதைத் தவிர்த்து பரதபுரீ ராமசந்திரசாஸ்திரிகள், அமிருதசாரபுரீவாசி பண்டிதபல்கீ ராமசாஸ்திரிகள் பண்டித கஜபதி லாகூர், காசி சிவகுமாரசாஸ்திரிகள், [illegible]கர் நகரத்து வக்கீல் முனிஷி பானுபாரிலால் அவர்கள்முதலிய பலரால் வெகு மதவிடயப்பிரசங்கங்கள் செய்யப்பட்டன.

4-வது தினம்.

நான்காவது தினத்து நடவடிக்கை பகல் 2-மணிக்குத் துவக்கப்பட்டது. ராஜபுத்திரஸ்தானத்துள்ள பண்டிதர் ராமசந்திரர், ஹி

[illegible]

[illegible]

[illegible]

ந்துக்களின் சிராத்த சம்பிரதாயத்தைப்பற்றி ஓர் பிரசங்கம் வடமொழியிற்றுனேசெய்தார். அதே விடயத்தைப் பண்டித ரகுவாதயால் அவர்களும் பேசினார்கள். பிறகு பண்டித கிஷோரிலால் (ஆஜ) இக்காலத்தில் இந்துக்களுடைய குறைவான நிலையும் அதின் வியஸனகரணத்தையும் வடமொழியின் அபிவிருத்தியையும்பற்றி ஓர் பிரசங்கஞ் செய்தார். உடன் காசி குமாரஸ்ரீகிருஷ்ணபிரசன்ன பண்டிதர் மிகவுருக்கமாய் அனேக விடயத்தைப் பேசி டெல்லிமாநகரத்தில் ஒரு வடமொழிச் சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டியதாய் வற்புறுத்திக் கூறினர். பண்டித தீனதயால் இதே விடயத்திற் பேசினர். அவரோ ஒரு கையொப்பப் பட்டியையும் கொண்டுவர அங்கே 15000 - ரூபாய்வரையிற்கையொப்பமாயிற்று.

பிறகு பொதுக்காரியதரிசி வெளியிலிருந்து வந்த பல வபிமானிகளின் தந்திகளையும் பத்திரிகைகளையும் படித்தார். அவைகளை அனுப்பியவர்கள் H. H. காசி மகாராஜா, H. H. தர்பங்கா மகாராஜா, லூதினியா ஸர்தார் ஸர் ஆதர்சிங். K. C. S. I. சபுர்தலா திவான் ராம்ஜஸ் C. S. I. ராய் மெத்தாபெஹலால் C. I. E. உதயபுரீராஜ்ய முக்கிய மந்திரி, கன்வார்லால் மித்தா, திவான் மிச்ர அச்ருமால், மதுராசேட் லக்ஷ்மணதாஸ் C. I. E. லாஹோர் ராஜா ஹரிபூஷணசிங் அலகாபாத்,

[illegible]

பண்டித மதனமோகன்மாளவீய B. A., லாகோர் மகாமகோபாத்தியாய பண்டிதகுருப்ரசாதர்முதலியவர். (இது சுருக்கமாதலின் மற்றுமனேகர் அனுப்பிய தந்திகளையும் தர்மசபைகளின் வர்த்தமானங்களையும் இங்கெடுத்துக் காட்டவில்லை.)

பிறகு அக்கிராசனதிபதி ராஜா அவர்கள் அபிப்பிராயத்தை அனுசரித்துப் பொதுக்காரியதரிசிபண்டிதர் வரும் தீர்மானத்தைச்சொல்ல அது பெருகு ஜனங்களால் ஜயத்தொனியுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது.

5 - வது தீர்மானம்.

நமது மகாமண்டலம் அடுத்த வருடம் கார்த்திகைமாதத்தில் காசியிற் கூடவேண்டும். தேதிபின் குறிக்கப்படும்.

5-வது தினம்.

இன்றும் முறைப்படி வைதிக்ங்கள் நடக்கப் பிறகு அக்கிராசனதிபதி ராஜா அவர்கள் நான்குதினத்து நடவடிக்கைகளையும்சுருக்கிப் பேசினர். மேல் அவர் சொன்னது. நான் மிகச் சந்தோஷத்துடன் "நீங்கள் இந்த மகாமண்டலத்தில் என்னிடங் காட்டிய பக்தி விசுவாசங்களுக்காக மிகவும் வந்தனமுள்ளவனயிருக்கிறேன். அங்ஙனமே நான் இப்பொழுது இந்த டில்லிமாநகரில் இருக்கும் ஆரியசகோதரர்களுக்கும் விசேஷமாய் நல்வரவுகொண்டாடும் நற்சபையார்க்கு அதிகமாய் நமது காரியதரிசி பண்டிதர் தீனதாயல்அவர்களுக்கும் அவர்கள் இம்மகாமண்டலங்கூடி யாதுங் குறைவின்றி நிறைவேறவேண்டி எடுத்துக்கொண்ட பெருமுயற்சிக்கும் தேகசிரமத்துக்குமாக நான் எனக்காகவும் இங்குஇப்பெரிய ஆரியதேசத்தின் நாற்புறங்களிலுமிருந்து வந்து கூடிய பண்டித ஜனங்களின் பிரதிநிதியாயும் வந்தனஞ் சொல்லுகிறேன். அதிகமாய்த் தேகத்துண்டாகும் எவ்வித கிலேசத்தையும் எதிர்நோக்காது இப்பரத வருஷத்தின் பல பாகங்களினின்று இங்குக்கூடிய பண்டிதர்களுக்கு நான் என் மனப்பூர்வமான வந்தன மரியாதைகளைச் செய்கின்றேன். ஏதோ காலவசத்தாற் குறைவுற்ற நமது நன்மத விரிவில்மிகுந்திருந்து ஒளிக்கும் நக்ஷத்திரங்கள் இவர்களே. இவர்களே பலவிதத்தில் இருள்நிறைந்த இக்காலத்தில் நல்வழிகாட்டப் பிரகாசங்கொடுப்பவர். நமது மதாசார சம்பந்தமான எவ்விதவுயர்வும் புரோவிர்த்தியும இவர்களாற்றான் அமையக்கூடியது. மகாகனம்பொருந்திய பண்டிதமணிகளே! உங்களை யான் வேண்டிக்கொள்வது யாதெனில், நீங்கள் அவ்வப்பொழுது நல்வழி

[illegible]

[illegible]

ளை எங்களுக்குபதேசித்து வேண்டியபடி கல்வியால் சகாயம்செய்யவேண்டும். நீங்கள் அவ்வித நல்லெண்ணங் கொண்டால் அதன்பயன் அளவிலடங்காது. இங்கு வந்து தர்மோபந்யாசங்கள் புரியக் கருணைகொண்ட பண்டிதர்களுக்குக் காலக்குறைவால் இடங்கொடுக்கப்படாமைபற்றி நான் அவர்களிடம் மன்னிப்புக்கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கு வந்திருந்த பண்டிதர்களின் தொகை சுமார் ஐந்நூற்றுக்கு மேலிருக்க நாலைந்துதினங்களுக்குள் இவர்களுக்கு வேண்டிய பிரசங்கஞ்செய்ய இடங்கொடுக்க எவ்விதத்திலும் முடியாத காரியமன்றோ தங்கள் உள்ளங்களிற் றோன்றும் அபிப்பிராயங்கள் மிகவும் புகழத்தக்கதாயிருக்குமென்பதற் கையமில்லையாயினும் நான் உங்களை வேண்டிக்கொள்வதாவது தாங்கள் இம்மகாமண்டலத்திற்கு வெளியிற்செய்யவேண்டிய பல காரியங்களில் அவைகளை நன்கு உபயோகப்படுத்துவிப்பீர்கள் என்பதே. இப்பாரத தர்ம மகாமண்டலஞ் செய்யவேண்டிய காரியங்கள் இங்கு கூடிய நமமேலோர் புத்திக்கும் சத்திக்குமப்பாலுமுண்டு.

[illegible]

இவ்விஷயத்தை மனத்தில் வைத்து மகாமண்டலத்துக்குப் பாடுபடுவீர்களாக. இவ்விதம் ஒருமகாசபை கூட்டவேண்டும் என்கிற அபிப்பிராயம் சிலமகான்களின் மனதிற்பட்டும் அவர்மனம் இவ்விதம் பகிரங்கமாய் நமது தாய் பூமிக்காகப்பாடுபடப் பரிபாகம் பெறவில்லை. மூன்றுவருஷங்களுக்கு முன் ஒருமத மகாமண்டலம் உண்டாக வேண்டி, இமயமலையின் அடிவாரத்தில் ஹரித் துவாரத்தில் கங்கையோரத்தில் சில சந்நியாசிகளும் சில பண்டிதர்களும் கூடியதுண்டு. இச்சபையும் இந்துவாகிய எவனுக்கும் நல்வழிகாட்டக்கங்கைமாநதியைப் போன்றதேயாதலின் இவ்விஷயத்தில் கூடியவரையில் நீவிர் உழைக்கவேண்டும். சென்ற வருஷத்தில் இவ்விஷயமாய் ஒருசபைபிருந்தாவனத்திலும் சிலதினங்களுக்குமுன் பாடலீபுரத்திலும் ராஜஷாய் என்னும் எனதூரிலும் கூடியதுண்டு. இவ்விதம பலசபைகளின் கருத்துங்கூடிஎவ்விதத்திலும் ஒரு பொதுவான மகாமண்டலத்தை நிலைநாட்டுவதே. இம்மகா ஸங்கற்பம் இப்பொழுது நிறைவேறியது. நான் இப்பொழுது உங்களுக்கும்

[illegible]

கடைசியில் சொல்வதியாதெனில் நீங்கள் எல்லோரும் கூடி எங்கும் இம்மகா மண்டலத்தின் காரியஸ்தானம் ஸ்திரமாய் வைக்கலாகும் என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்பதே.

பிறகு பாபுவிந்தியனதஜா பி- எ- அவர்கள் (தர்பங்கா மகாராஜா அவர்கள் பிரிதிநிதி) எழுந்துமிக வாவலுடன் அக்கிராசனாதிபதி சொன்ன விஷயத்தை அனுமோதித்துக்கீழ்வரும் தீர்மானத்தை எடுத்துரைத்தார்.

7-வது தீர்மானம்

இப்பாரத வருஷத்திலுள்ள எவ்வித தர்மசபைகளும்தத்தமபிப்பிராயங்களையும் உத்தேசங்களையும் எமக்குத் தெரிவிக்கவும், இப்பாரத கர்ம மகாமண்டலத்துக்குப் பொதுக்காரியசபை இருக்கவேண்டிய நடுவான விடம் இஃதென்பதைக் குறிக்கவும், அம்மண்டலத்துக்குத் தகுந்த நிர்வாக சபையாரைத் தெரிந்தெடுக்கவேண்டியமனிதர்களைக் குறிக்கவும், பாரததர்மமகாமண்டலத்தின் அத்தியக்ஷர்களாகக்கூடிய பதின்மர்பெயரைக்குறிக்கவும், இத்தேதிமுதல் மூன்றுமாதம் அவகாசம் கொடுக்க வேண்டும்.

[illegible]

இ- ம- பாபுவிந்தியனதஜா B-A. அவர்களுரைக்க லாஹோர்பண்டிதகோபீனதர் அவர்களால் அனுமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்பப்பட்டது.

சபை கலைவதற்குமுன்னரே பம்பாய் நகரத்திலிருந்து வந்த பண்டிதர் குத்துலால் என்பவர் அங்கு கூடிய பண்டிதர்களுக்குப் பிரதிநிதியாய் 8- ஸம்ஸ்கிருத சுலோகங்களால் அக்கிராசனாதிபதியையும் பாரததர்ம மகாமண்டலத்தையும் ஆசீர்வதித்தார். உடனே அக்கிராசனாதிபதியான ராஜா சசிசேகரேசுவராய் அவர்கள் தன்மரியாதையாய் ஒருவைர மோதிரத்தையும மகாமண்டலத்தின் மரியாதையாய் "பாரத மார்த்தாண்டர்" என்னும் பட்டத்தையும் அப்புலவருக்களித்தார். இரவு-9- மணிக்கு மெது காருண்ணிய சக்கிரவர்த்தினியாருக்குமூன்று ஜயத்தொனிகளும் பாரதத

[illegible]

டில்லீ

உக-கக-கூ0- } [ஹஸ்தாக்ஷரம்]

"தீநதயாலுஶர்மா."

ர்ம மகாமண்டலத்துக்கு மூன்று ஜபத்தொனிகளும் போட்டுச் சபை கலைத்தார்கள்.

21-11-90 } (ஒப்பம்)
தீனதயாளசர்மா.
டில்லி. } பொதுக்காரியதரிசி.

பாரத தர்ம மகாமண்டலம்.

(மொழிபெயர்ப்பு.)

ஶ்ரீ ப்ரஹ்மவித்யா.

சிதம்பரம்:—விக்ருதி-ஞூ மார்கழி-மீ உ-வ

பாரததர்மமஹாமண்டலம்.

[illegible]

பாரத தர்ம மகாமண்டலம்.

நண்பர்காள்! பண்டிதர்காள்! மேற்குறித்த மகாமண்டலத்தின் வரலாற்றை நோக்குக. அது எவ்வளவு ஆச்சரியகரமாகவும் ஆனந்தகரமாகவும் இருக்கிறது.

[illegible]

இவ்விதம் நமது தேசத்துப பண்டிதர்கள் ஒன்று சேர்வார்கள் என்பது யாம் கனவிலேனும் கருதியதுண்டோ! இப்பொழுதேனும் நமது தென்னாட்டுப்பண்டிதர்கள் எவரேனும் நெடுந்தூக்கம் விட்டொழித்தனரோ? மதவிஷயமாய் நமக்கு நமதரசாங்கத்தார் கொடுத்திருக்கும் சுதந்திரத்தையும் நாம கையாடா திருப்பதழகோ? வடநாடுகளில் தோன்றிய அறிஞர் கோஷ்டியைப் பாருங்கள்! அவ்விடத்திய மகாராசாக்களும் சிற்றரசர்களும்செய்யும் உபகாரத்தைக் கவனித்தீர்களா? இவ்வித மகாமண்டலத்தில் நம் நாட்டவர் எவரும் போகாதொழிந்தது விசனகரமே. நந்தேயத்துள்ள சுதேச மகாராஜாக்களும் சிற்றரசர்களும் அபிமான சங்கதியு மனுப்பாதிருந்துவிட்டார்கள். இங்குள்ள பல மடாதிபதிகளுள் ஒருவரேனுமிவ் விஷயத்தை யபிமானிக்கலாகாதா? ஐயோ! என்செய்வோம்! எந்தத்தென்னாட்டு மடாதிபதியாயினும் உலகம் வருந்துவதை யறிந்தாலல்லவோ அவர் தன் சீடனைக்காக்க முயல்வார். அந்தக்குலத்தில் அதாவது மடாதிபதிகள் குலத்தில் ஒருவருமில்லாமற்போனால் அஃதுசிதமல்லவென்று கரு

[illegible]

தியேபோலும். ஸ்ரீவல்லபாசாரிய மடாதிபதி ஸ்ரீதேவகிநந்தனசாரியார் அங்கு மகாமண்டலத்தைக் கனப்படுத்தினர். அவ்வல்லபமதம் பரவுதற்குமுந்தியே நமது தேசத்திற் பரவிய மத்துவாசாரியமதமு ராமானுஜாசாரியமதம் சங்கராசாரியர் மதம், ஸ்ரீகண்டசிவாசாரிய மதம் இவைகளின் அதிபர்கள் இருக்கிறார்களே அவர்கள் வெளிவரலாகாதா? ஐயா! இஃதென்ன விபரீதம்! தன் பெண்டுகளைக்கலந்து சுகமே வாழ அரசாங்கத்தாரறியவேண்டும். மற்றவர் பெண்டிருடன் மனங்கலந்துவாழத் தன் சுயேச்சையென்று படுமோசமாய் விதிகள் மாறிவருங் காலத்துமே நித்திராசமாதியிலுள்ள நமது மடாதிப நிர்மல யோகீசுவரர்களால் நமக்குண்டாகும் பிரயோஜனந்தான் என்னே? ஓ மடபண்டிதர்காள்! நீங்கள் மடங்களில் வேண்டியதை வாங்கி. விழுங்கிப் புரண்டுகிடக்கின்றீர்களே. ஐயோ! இவ்வுலகத்துக்கெனச்சிறிது உழைக்கலாகாதா? மடத்தாருக்குப்பிச்சை யிட்டஞ் செய்வதும் சீடர்களிடம் ஏதோ சொல்லிப் பொருள் பறிப்பதுமே நமது தொழிலாயிற்றோ? நீங்கள் அவ்வாசிரியரிடம்

[illegible]

போகும்பொழுதெல்லாம் உலகக் கேட்டைச் சொல்லலாகாதா? உலகம் முன்போலவா விருக்கின்றது. மடத்தார் செய்யவேண்டியதுதான் என்னே? இம்மடத்துச் சீடர்களே இப்பொழுது வேதங்களை விட்டொழித்தார். தருமசாஸ்திரங்களைச் சிறிதும் கவனிப்பதில்லை. புராணங்களைப் பொய்யென நவில்வர். ஆன்றோர் மொழிகளை ஆராய்வதில்லை. நன்னடையொழித்துப் பிறர் நடைகொண்டு அவ்வழி நடித்து அவர் மனங்களித்தால் அதுவே வீடென அகத்திற்கொண்டு அதற்கேற்றபடி ஆங்காங்குக்கூடி "அதை மாற்றுவோமா? இதை மாற்றுவோமா? ஆசாரம் வேண்டாம், விவகாரம் வேண்டாம்" என்று பல பேசிவருகிறார்கள். இக்காலத்தோ ஒருவரேனும் தம குலதருமத்தைக் குறைவின்றி நடத்துவது மிகக் கடினமாய் அமைகின்றதே. விசாரித்தா லில்லையென்று மல்லவோ சொல்ல நேரிடுகின்றது. ஆனை குதிரை விருதுகளோடு வெளிவந்து பிரசங்கஞ் செய்து சீடர்களை அனுக்கிரகிக்க முடியவில்லை யெனில், இனி இவர்க்குச் சர்வபரிசாரகங்களும் கிறிஸ்தவர் மகமதி

[illegible]

யாரற்றுன் ஆகவேண்டிவரும். இப்பொழுதே பெரும்பான்மை பரிசுத்த மடாலயங்களுக்குள் பல மகமதியர் வேலைக்கமர்த்தப்பட்டு வழங்கிவருகிறார்கள். இந்து மதா... சாரிய மடங்களில் தமது குல... ருவுக்குப் பணிவிடைசெய்யத் தம் மினத்தார் குறையவும் வேறினத் தார் அங்கு நிறையவும், மடாதிப திகள் மௌனராய் நிற்கவும், மற்ற மானேஜர் இஷ்டம்போல நடக்க வும், தன்தொழில் மறக்கவும், மற்ற வர்தொழில் பெருகவுங் காலம்வ துவிட்டது.

இன்னும் வரும்.

Chidambaram. Printed and Published for the Proprieter at the Brahmavidya Press, No. 76. Seu-kalooneer Pilliar koil Street.

ஓம்.

[illegible]

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை பிரசுரஞ்செய்யப்படும்.

புத்தகம்-5. சிதம்பரம்: 1891ஸு ஜனவரிமீ 1உ இல-6.



[illegible] ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—விகிர்தி-ஸு மார்கழி-மீ உ-உ.

[illegible]

[illegible]

பாரத தர்ம மகாமண்டலம்.

தொடர்பு.

ஸ்ரீமத் சங்கராசாரியசு வாமிகள் வெளியேறி நாடோறுஞ் சென்றுபிரசங்கிக்கவில்லையா? ஸ்ரீ மத் ராமானுஜாசாரிய சுவாமிகள் திருக்கோட்டியூர்க்கோபுரத்தினி ன்றுபிரசங்கிக்கவில்லையா? ஸ்ரீசுத்